தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

திங்கட்கிழமை, 1986 ஏப்ரல் 28, சித்திரை 15, அட்சய திருவள்ளுவராண்டு 2017.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (மாண்புமிகு டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

அர்ச்சகர்களுக்குச் சம்பளம்.

*211. வினா—திரு. அ. ப. சிவராமன் : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) காட்டுமன்னார்கோவில் வட்டம், ஸ்ரீமுஷ்ணம் அருள்மிகு பூவராகசுவாமி திருக்கோவிலில் பணியாற்றும் அர்ச்சகர்களுக்கு, சம்பளம் வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் யாது ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) 'சம்பளம்' என்ற வகையில் மாதம் ஒரு தொகை ஏதும் வழங்கப்படுவதில்லை. மாதந்தோறும் ரொக்கம் படித்தரம், பட்டைசாதம், அர்ச்சனை சீட்டுப் பங்குத் தொகை, இவைகள் வழங்கப்படுகின்றன.

(இ) 'மாதச் சம்பளம்' என்ற பெயரில் தொகை ஏதும் பெற அர்ச்சகர்கள் மறுத்துவிட்டனர்.

திரு. அ. ப. சிவராமன் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே மிகவும் சரித்திரப் புகழ்வாய்ந்த ஸ்ரீமுஷ்ணம் அருள்மிகு பூவராகசுவாமி திருக்கோவிலில் இறைத்தொண்டு புரியும் அர்ச்சகர்கள் எத்தனை பேர் உள்ளனர்? அவர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியமாக சம்பளம் என்று இல்லாவிட்டாலும், எவ்வளவு தொகை தந்து கொண்டிருக்கிறீர்கள்? அந்த ஊதியம் எப்போது நிர்ணயிக்கப்பட்டது? அதைக் கூடுதலாக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவர் அவர்களே, நான்கு அர்ச்சகர்கள் அங்கே பணியாற்றுகின்றனர். அவர்களுக்கு ஊதியம் அல்லது சம்பளம் என்கிற வகையில் ஆகம விதிப்படி பெற்றுக்கொள்வது தவறு என்று மறுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் ரொக்கப் படித்தரமாக ரூ. 10—19 மற்றும் 90 பட்டை சாதமும், அர்ச்சனைச் சீட்டுப் பங்குத் தொகை சராசரி ரூ. 250-ம் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இவை தவிர, வருகின்ற பக்தர்களிடமிருந்து தங்களுக்குச் சம்பளமேதுமில்லை; ஆகவே, தாங்கள் கஷ்டப்படுவதாகக் கூறி தட்டுக் காணிக்கையாக அவர்கள் கொஞ்சம் தொல்லைப்படுத்தி வசூலிப்பதாக அறநிலையத் துறைக்குத் தகவல் வந்திருக்கிறது. சாதாரணமாக இந்த அர்ச்சனைச் சீட்டு பங்குத் தொகை பெறுகின்றதைப்போல, சுமார் மூன்று மடங்கு அதிகம் இந்தத் தட்டுகளின் மூலம் அவர்களுக்கு வருமானத்தொகை கிடைப்பதாகக் கூறப்படுகிறது. அதைத் தவிர பிரம்மோத்சவம் காலங்களில் சுமார் 2,000 ரூபாய் வரை பெற்றுக்கொண்டு வருகிறார்கள். இவைகள் அனைத்தையும், அவர்கள் சட்டப்படி ஊதியமாகத் தருவதை மறுத்துவிட்டு, ஆகம விதிகளின் பேரில் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதனால் பல புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. இதைப்பற்றி தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆணையாளருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. அ. ப. சிவராமன்: தலைவர் அவர்களே, இறைவனை விட இறைத் தொண்டு புரிகிறவர்கள் உயர்ந்தவர்கள் என்று சொல்வார்கள். அவர்களுக்குக் குறைந்தபட்சம் ஏதேனும் ஊதியம் அளிக்கப்படுமா? தமிழகத்தில் விளக்குகள் இல்லாத கோவில்களுக்கு எல்லாம் விளக்கேற்றி வைத்த தமிழக அரசு இந்த அர்ச்சகர்களின் வாழ்க்கையிலும் விளக்கேற்றி வைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவர் அவர்களே, இறைவனை விட இறைவனுக்குத் தொண்டு புரிகின்றவர்கள் மிகச் சிறந்தவர்கள் என்கிற தத்துவத்தையே தமிழகம் தான் உலகத்திற்கே உணர்த்தியிருக்கிறது. அதன் அடிப்படையே இறைவனைவிட இறைத்தொண்டு புரிகிறவர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள் என்பதுதான். ஆகவேதான் சிறுத்தொண்டர் வரலாற்றுப் புராணமே உருவாக்கப்பட்டு, இலக்கியம் படைக்கப்பட்டிருக்கிறது. தொண்டு உள்ளத்தோடு காரியங்கள் நடைபெற வேண்டுமென்று சமுதாயம் எதிர் பார்க்கிறது. அவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதில் யாருக்கும் இரண்டுவித கருத்து இல்லை. பல ஆலயங்களில் போதுமான வருமானம் இல்லை; அவர்களுக்கு வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவைக்கு வேண்டிய வருமானம் கிடைப்பதில்லை, ஆனாலும் வேறு வழியில்லை.

1986 ஏப்ரல் 28]

அவர்கள் ஒரு பகுதிநேர ஊழியமாகத்தான் இதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு அந்த ஆலயத்தில் எந்த அளவுக்கு வருமானம் வருகிறதோ அதை வைத்துத்தான் கொடுக்க வேண்டியிருக்கிறது. பல ஆலயங்களுக்கு நம் முன்னோர்கள் சொத்துக்களை விட்டுச் சென்றிருக்கிறார்கள். நிலச் சொத்துக்களாகவும், பிற சொத்துக்களாகவும் விட்டுச் சென்றிருக்கிறார்கள். ஆனால் அவற்றின் மூலம் வருமானம் கிடைக்காத சூழ்நிலையில் அந்த அடிப்படைத் தத்துவத்தை நிறைவேற்ற முடியாமல் நாம் இன்றைக்குத் தொல்லைப்பட்டுக்கொண்டிருக்கிறோம். குறைந்த பட்சமாக ஒரு நூறு ரூபாய் அடிப்படைச் சம்பளம் தரவேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதைக்கூட சில ஆலயங்களில் தர முடியவில்லை.

குறிப்பாக இந்த ஆலயத்தைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட சங்கடம் எதுவும் இருப்பதாகத் தகவல் இல்லை. ஆனால் பல ஆயிரக்கணக்கான ஆலயங்களில் அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான் இவைகளையெல்லாம் எப்படித் தீர்த்து வைப்பது? வேறு வருமானம் இருக்கிற ஆலயங்களிலிருந்து மாற்றலாம் என்கிற கருத்து கூட சொல்லப்படுகிறது. ஆனால் அது இந்த அறநிலையத்துறைக்கு மட்டுமல்ல, ஆலய வழிபாட்டுக்கும் உகந்ததல்ல. எந்த எந்த ஆலயங்கள் எந்த எந்த மக்களால் பாதுகாக்கப்பட வேண்டுமோ அந்த அந்த மக்களாலேயே அவை பாதுகாக்கப்படவேண்டுமே தவிர, வேறு ஆலயங்களினுடைய உதவிகள் மூலம் பாதுகாப்பதென்பது நடைமுறைக்கு இயலாத ஒன்றாகும். அது தத்துவத்திற்கும் முரணானது. ஆகவே மக்களிடத்திலே இதற்கான விழிப்புணர்வை நாம் உருவாக்க வேண்டும். நமக்கு என்று இருக்கின்ற ஆலயத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வு அவர்களுக்கு உருவாக்கப்பட வேண்டும். ஆகவே இறைவனுக்குத் தொண்டு செய்கிற அந்தத் தொண்டர்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பையும் அங்குள்ள மக்கள் சமுதாயமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதுதான் அரசின் கருத்து. ஆனாலும் குறைந்த பட்ச ஊதியம் வாங்கிக்கொண்டிருக்கின்ற அர்ச்சகர்களுக்கு இதிலே குறிப்பிட்ட அளவு ஊதியமாவது வழங்க உத்தரவாதம் செய்யப்பட வேண்டுமென்பதைக் கருத்திலே கொண்டு, அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆலய அலுவலர்களுடைய ஊதிய விகிதங்களை மாற்றி அமைப்பதற்கு ஒரு குழு அமைத்து பரிசீலனை செய்வதென்று அரசு முடிவு எடுத்திருக்கிறது. சட்டமன்றப் பேரவையிலும் இதுபற்றித் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-05)

திரு. சி. இராமலிங்கம் : தலைவரவர்களே, ஆலய அர்ச்சகர்களுக்கு பல சலுகைகளை இப்போது அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆலய ஊழியர் இறந்தால், 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பது என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. அது தமிழ் நாட்டிலுள்ள அர்ச்சகர்களுக்கும் வழங்கப்படுமா? தமிழகம் முழுவதும் எவ்வளவு அர்ச்சகர்கள் இருக்கிறார்கள் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்வி ஸ்ரீமுஷ்ணம் பற்றியது.

திரு. சி. இராமலிங்கம் : தலைவரவர்களே, கேள்வி புறம்பானதாக இருந்தாலும், நாட்டு மக்களுக்கு அதுபற்றி அறிவித்தால் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தமிழ்நாட்டில் 40 ஆயிரம் கோயில்கள் இருக்கின்றன. அவ்வளவையும் இதற்குள் புகுத்திவிட முடியுமா?

திரு. சி. இராமலிங்கம் : தலைவரவர்களே, ஊராட்சி ஆசிரியர்கள், நகராட்சி ஆசிரியர்கள், மற்ற ஆசிரியர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக அறிவித்ததைப் போல, அர்ச்சகர்களையும் அரசு ஊழியர்களாக்குவது பற்றி அறிவித்து, அவர்களுக்கு வாழ்க்கைக்குத் தேவையான சம்பளம் கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்தப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவரவர்களே, இவ்வளவு நேரம் இந்தச் சிக்கல்பற்றித்தான் நான் விளக்கிக் கொண்டிருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் எங்கே கவனித்துக் கொண்டிருந்தார்கள் என்றே எனக்குத் தெரியவில்லை. மீண்டும் இவர்களை அரசு ஊழியர்களாக மாற்ற முடியுமா என்று உறுப்பினரவர்கள் கேட்கிறார்கள். இப்போது இது ஒரு 'பேஷனாக' கூட மாறியிருக்கிறது. அரசு அலுவலர் என்று அறிவிப்பதிலே சிக்கல் இல்லை. ஆனால் அவர்களை அப்படி அறிவித்துவிட்டால், அவர்களுக்கு அடிப்படைச் சம்பளம், அகவிலைப்படி மற்ற வசதிகள் இவைகளையெல்லாம் எங்கேயிருந்து கொடுப்பது என்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் யோசனை சொன்னால், அதைப்பற்றி அறநிலையத் துறை தாராளமாகப் பரிசீலிக்கும். தமிழ் நாட்டில் எவ்வளவு பேர் அர்ச்சகர்களாக இருக்கிறார்கள் என்று கேட்டார்கள். அநேகமாக 50 ஆயிரம் அல்லது 60 ஆயிரம் அர்ச்சகர்கள் இருக்கக்கூடுமென்று தோராயமாகச் சொல்கிறேன். அதுபற்றிப் புள்ளிவிவரம் இப்போது என்னிடம் இல்லை. 50 ஆயிரம் அல்லது 60 ஆயிரம் ஆலயங்களினுடைய வருமானத்தைப் பற்றி உறுப்பினர்கள் கேட்டால், 100 ரூபாய், 200 ரூபாய் கூட வருமானம் இல்லாத கோயில்கள் பல்லாயிரக் கணக்கில் இருக்கின்றன. சொத்துக்கள் இருக்கின்ற கோயில்களின் வருமானம் கூட வருவதில்லை. அதை வைத்துக்கொண்டு தர மறுக்கிறார்கள். தலைவரவர்களே, அவர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக

1986 ஏப்ரல் 28]

ஆக்குகின்ற பிரச்சினை எழவில்லை. அது எந்தக் காலத்திலும் நடக்காது. அப்படி நடத்துவதும் சரியல்ல. காரணம் அவர்கள் எல்லாம் அரசினுடைய அலுவலர்கள் அல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவராமன் தெரிவித்ததைப்போல, அவர்கள் எல்லாம் இறைவனுக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற தொண்டர்கள். ஆகவே, அவர்களை அரசினுடைய ஊழியர்களாக மாற்றுவது என்பது ஆகம விதிப்படி கூட சரியாக இருக்காது. ஆலய அலுவலர்கள் இறந்தால், 5 ஆயிரம் ரூபாய் தருவதற்கு இருக்கிற திட்டம் அர்ச்சகர்களுக்கு உண்டு. இப்போது அந்த 5 ஆயிரம் ரூபாயை 10 ஆயிரம் ரூபாயாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதுபற்றிப் பேரவையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், குறைந்த வருமானம் உள்ள அர்ச்சகர்களைப் போன்றவர்கள் அவர்களுடைய இன்சூரன்ஸ் கட்டணத்தைக் கூட அவர்கள் கட்ட வேண்டாமென்று சொல்லி, அதை அறநிலையத் துறையிலிருந்து கட்டிக் கொண்டிருக்கிறோம்.

திரு. மு. செ. சங்கரலிங்கம்: தலைவரவர்களே, மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாவிட்டாலும் . . . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினருக்கு உறுதியாகச் சொல்கிறேன். 'சம்பந்தம் இல்லை' என்று பிரகடனப்படுத்திவிட்டே உறுப்பினர் அவர்கள் கேட்டால், அவருக்கு எப்படிக் கேள்வி அனுபவம் இருக்கிறது என்று நம்ப முடியும்? கேள்விக்கு சம்பந்தம் இல்லை என்று உறுப்பினரவர்கள் சொல்லிவிட்டு, பின்னர் கேட்டால் எப்படி?

திரு. மு. செ. சங்கரலிங்கம்: தலைவரவர்களே, நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் தாலுகாவில் உள்ள கோவில் ஊழியர்களுக்கு 5 மாதங்களாக சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று புகார் அரசுக்கு வந்துள்ளதா? அப்படி வந்திருந்தால், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னைக் காப்பாற்ற வேண்டும்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: ஸ்ரீமுஷ்ணம் பற்றிய கேள்விக்கு என்னிடத்தில் குறிப்பு இருக்கிறது. உறுப்பினரவர்கள் வேறு கேள்வி போட்டால், அதற்கான விவரங்களைச் சேகரித்துத் தர முடியும்.

திரு. எல். ஜெயச்சந்திரன்: தலைவரவர்களே, அர்ச்சகர்களின் ஊதியத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, அந்த அர்ச்சகர்களை எல்லோரும் ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்திருப்பதால், அதாவது 'பார்வேடு கம்யூனிட்டி' யில் இருப்பதால், அவர்களுடைய பிள்ளைகள் கல்லூரிக்கோ, வேலைக்கோ

போகும்போது அவர்களுக்கு இடமோ, வேலையோ கிடைக்கவில்லை. அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் 50 ஆயிரம் அல்லது 60 ஆயிரம் அர்ச்சகர்கள் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்சினை அமைச்சர் அவர்களுடைய துறையைச் சார்ந்ததில்லை என்றாகும், இந்த அர்ச்சகர்களை மட்டுமாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஆலோசித்து, பின் தங்கிய வகுப்பினர் என்று அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினருக்கு ஒன்று சொல்கிறேன். ஏற்கெனவே அவர் தெரிவித்திருக்கிற கொள்கையைத்தான் உறுப்பினரவர்கள் திருப்பித் திருப்பிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு நேரமாகிறது?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவரவர்களே, இது ஒரு நீண்ட விடை அளிக்கவேண்டிய கேள்வி. தயவுசெய்து உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வியாகப் போட்டால் அதற்கான விரிவான பதிலைத் தரமுடியும். அது குறுகியகால வினாவாக இருந்தாலும்கூட, அதைப்பற்றி துறை பரிசீலிக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கே 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 10 கேள்விகள் இருக்கின்றன.

(முற்பகல் 10-10)

திரு. சி. ஆர். கோலப்பா : தலைவர் அவர்களே, கோயில் அர்ச்சகர்களாக வேறு சமுதாயத்தைச் சார்ந்தவர்களையும் நியமிக்கும் கருத்து அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இது ஸ்ரீமுஷ்ணம் கோயில் அர்ச்சகர்களின் ஊதியத்தைப் பற்றிய கேள்வி.

சந்தனக்கட்டை எண்ணெய் ஆலை.

*212 வினா.—**திரு. அ. ப. சிவராமன் :** மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டு கிறேன் :—

(அ) வாணியம்பாடி அருகிலுள்ள தெக்குப்பட்டி கிராமத்தில், சந்தனக் கட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கும் ஆலை ஒன்று கட்டி முடிக்கப்பட் டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது உற்பத்தி துவங்கும் ?